# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690
தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **11 ஆகஸ்ட் 2019** | **பொதுக்காலம் 19 ஆம் ஞாயிறு** | **மூன்றாம் ஆண்டு** |




**நீங்களும் ஆயத்தமாய் இருங்கள்; ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிடமகன் வருவார். (லூக்கா 12:10)**

## உங்கள் சிந்தனைக்கு...

ஆண்டின் பொதுக்காலம் 18ஆம் ஞாயிறுத் திருவழிபாட்டில் கலந்துக்கொள்ள வந்துள்ள அன்புள்ளங்களே! இறைஇயேசுவின் இனிய நாமத்தில் அன்பு வாழ்த்துகள்.

இறைவனின் நம்பகத்தன்மைக்கு எடுத்துக்காட்டு அவரின் வாக்குப்பிறழாமை. அதற்கு ஓர் உதாரணம் தருகின்றது இன்றைய முதல் வாசகம். எங்கே நம்பிக்கை உண்டோ, அங்கே அச்சமோ, பயமோ, அதிர்ச்சியோ, குழப்பமோ இருக்காது. கடவுளின் வாக்குறுதிகளின் மீது நம்பிக்கை வைத்திருப்பவர்கள் கடவுளின் முன்னிலையில் பெருமைப்படுத்தப்படுவார்கள் என்று சாலமோனின் ஞானம் இன்றைய முதல் வாசகம் வழியாக நமக்குக் கற்றுத் தருகிறது. 'நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவைக் கிடைக்கும் என்னும் உறுதி, கண்ணுக்குப் புலப்படாதவைப் பற்றிய ஐயமற்ற நிலை' என்று நம்பிக்கைக்கு வரையறை தருகின்கிறார் திருத்தூதர் பவுல்.

கிறிஸ்தவ வாழ்வின் மையமே நம்பிக்கைதான். அந்த நம்பிக்கைதான் ஆபிரகாமைக் கடவுளோடு ஒன்றிணைத்தது. அதே நம்பிக்கைதான் நோய்களைக் குணமாக்கியது. பாவிகள் மன்னிப்புப் பெற்றதும், இறந்தவர் உயிர் பெற்றதும் இந்த நம்பிக்கையால்தான்.. இன்றைய காலகட்டத்தில் வாழ்வில் பல குழப்பங்கள் வந்தாலும், ஒளிவீசும் நம்பிக்கையாக இயேசு நம்மில் செயல்படுகின்றார். சிறுமந்தைகளாகிய நீங்கள் “அஞ்சவேண்டாம் உங்கள் பரம தந்தையின் மீதும் நம்பிக்கை வையுங்கள். என்னிடமும் நம்பிக்கைக் கொள்ளுங்கள்“ என்று அழைக்கின்றார். நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதியான நம்பிக்கையில் விழிப்போடு செயல்படும் பணியாளர்களாக மாறவும் உயிரேட்டம் நிறைந்த செயல்பாடுள்ள வாழ்வு வாழ்வதற்காக வேண்டிய ஞானத்தையும் அருளையும் பெற்றுக்கொள்ள இறைமகன் இயேசுவிடம் மன்றாடுவோம்.

## வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பெருவிழா 2019



ஆண்டுதோறும் நமது ஆலயத்தில் நடைபெறும் வேளாங்கண்ணி தூய ஆரோக்கிய அன்னையின் ஆண்டுப் பெருவிழா இவ்வருடமும், சிறப்பாக நடைபெறவுள்ளது.

**08-09-2018 ஞாயிறு** மாலை 6:00 மணிக்குப் பெருவிழாத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருவுருவத் தேர்ப்பவனியும் நடைபெறும்.

**அனைவரும் வருக! வேளாங்கண்ணி அன்னையின் ஆசீர் பெறுக!!**

**இவ்வார நவநாளைச் சிறப்பிப்போர்** : தூய நற்கருணை ஆண்டவர் ஆலயம், காமண்வெல்த்
தூய தமதிரித்துவ ஆலயம், தம்பனிஸ்

**அடுத்தவார நவநாளைச் சிறப்பிப்போர்** : தூய அன்னாள் ஆலயம், செங்காங்

வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையின் பெருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட, தாராள உள்ளத்தோடு நன்கொடை கொடுத்து உதவும்படி உங்களை அன்புடன் வேண்டுகிறோம்.

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு



அன்பார்ந்தவர்களே! நமது தூய லூர்து அன்னை ஆலயப் புதுப்பிக்கும் பணிகள், வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக உங்கள் நன்கொடைகளை காசோலை மூலமாக “Church of Our Lady of Lourdes” என்ற பெயருக்கு வழங்கலாம். காசோலையின் பின்புறத்தில் “Building Fund” என்று குறிப்பிடவும். தாராள மனதுடன் உங்கள் நன்கொடைகளை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்




ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை காலைத் தமிழ் திருப்பலி முடிந்ததும், நமது ஆலயத்தில் தமிழில் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. உங்கள் பிள்ளைகளும் ஞானத்தில் வளர அனுப்பி வையுங்கள்.

## அன்னை மரியாளின் விண்ணேற்பு பெருவிழா (கடன் திருநாள்)



**திருப்பலி நேரங்கள்**

14-08-2019, புதன் : மாலை 6:30 மணி (ஆங்கிலம்)
15-08-2019, வியாழன் : மதியம் 12:30 மற்றும் மாலை 6:30 மணி (ஆங்கிலம்)
இரவு 8:00 மணி (தமிழ்)




## பொது விடுமுறைத் திருப்பலி நேரம்

**12-08-2019 திங்கள் - ஹரி ராயா ஹஜ்ஜி**

காலை 10 மணிக்குத் தமிழ் திருப்பலி
மதியம் 12மணி முதல் நம் ஆலய வளாகத்தின் இரும்புக் கதவுகள் மூடப்பட்டிருக்கும். அன்று நம் பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை

## புனித வின்சென்ட் தே பவுல் சபைக்கான காணிக்கை

கடந்த ஞாயிறு (04-08-2019) அன்று எடுக்கப்பட்ட இரண்டாம் காணிக்கையில் கிடைத்த மொத்த தொகை S$ 3905.55
பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை S$ 8
தாராளமாகக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.




## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி

**நாள்: 18-08-2019, ஞாயிறு மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும்.
வாருங்கள்! நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | சாலமோனின் ஞானம் 18:6-9 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 33: 1,12. 18-19. 20, 22 |
| **பதிலுரை:** | ஆண்டவர் தமது உரிமைச் சொத்தாகத் தெரிந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர். |
| **இரண்டாம் வாசகம்:** | எபிரேயர் 11:1-2,8-19 |
| **வாழ்த்தொலி:** | அல்லேலூயா, அல்லேலூயா! விழிப்பாயிருங்கள்; ஆயத்தமாய் இருங்கள். ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிடமகன் வருவார். அல்லேலூயா. |
| **நற்செய்தி வாசகம்:** | லூக்கா 12: 32-48 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

